# “ஸ்வீட் கார்ன்” (இனிப்பு மக்காச்சோளம்) அறிமுகம்

தமிழ்நாட்டில் மக்காச்சோளம் 3.2 இலட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 16.4 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மக்காச்சோளத்தின் ஒரு வகையானது இனிப்பு மக்காச்சோளம் (“ஸ்வீட் கார்ன்”) ஆகும். இவ்வகை மக்காச்சோளம் இளம் பருவத்தில் (சராசரியாக 75-80 நாட்கள்) இருக்கம் போது அறுவடை செய்யப்பட்டு உணவாகப் பயன்படுகிறது.

இனிப்பு மக்காச்சோளத்தில் குளுட்டன் கிடையாது. 11.6 சதவீதம் தாது உப்புக்கள் (கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து) மற்றும் பல உயிர்ச்சத்துக்களும் உள்ளன. ஆதலால் “சீலியாக்” நோய் (குடல் ஒவ்வாமை) உள்ளவர்களும் இதனை உணவாக எடுத்துக் கொள்ளலாம். இதில் அதிக அளவு நார்ச்சத்து உள்ளதாலும், நிதானமாக நம் உடலில் செரிமானம் ஆவதாலும், நீரிழிவு நோய், மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் மற்றும் உடல் பருமனாக உள்ளவர்களுக்கு மிகச் சிறந்த உணவாகிறது. இத்தகைய பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த (ஸ்வீட் கார்னிலிருந்து) இனிப்பு மக்காச்சோளத்திலிருந்து சூப், மசாலா சுண்டல், பக்கோடா, வடை, ஊத்தப்பம், கட்லெட், பிரியாணி, பாயாசம், கீர், மற்றும் அல்வா போன்ற மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயார் செய்யலாம்.




இந்த இனிப்பு மக்காச்சோளமானது, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வாகைக்குளத்திலுள்ள ICAR - வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இனிப்பு மக்காச்சோளமானது சாதாரண மக்காச்சோளத்தினைக் காட்டிலும் இனிப்புத் தன்மையில் மேம்பட்டு இருக்கிறது. இதன் மொத்த இனிப்புத் தன்மை 25 முதல் 35% ஆகும். இந்த இனிப்பு மக்காச் சோளமானது மிகக் குறைந்த கால வயதுடையதால் (சராசரியாக 75-80

நாட்கள்) தனி பயிராகவும் மற்றும் ஊடு பயிராகவும் பயிரிட மிகவும் உகந்ததாகும். கோடை காலத்தில் விவசாயிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால் இந்த குறுகிய காலப் பயிரை தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அக்கநாயக்கன்பட்டி கிராமத்தைச் சார்ந்த விவசாயிகளின் நிலத்தில் செயல் முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இக்கிராமத்தினைச் சார்ந்த 10 விவசாயிகளுக்கு "சுருச்சி" இரகமான உயர் விளைச்சலைத் தரக்கூடிய இனிப்பு மக்காச்சோள விதை 300 கிராம் வீதம் 3 கிலோ விதை வழங்கப்பட்டது.

ஒவ்வொரு விவசாயியும் 10 செண்டில் முதல் நிலை செயல் விளக்கத்திடலாக இனிப்பு மக்காச்சோளத்தினை பயிரிட்டனர். இனிப்பு மக்காச்சோளத்திற்கும் சாதாரண மக்காச்சோளத்தினைப் போன்றே சாகுபடி முறைகளைக் கையாளலாம். ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10கிலோ விதையினை வரிசையில் ஒரு அடி இடைவெளியில் வரிசைக்கு வரிசை ஒன்றரை அடி இடைவெளியில் பயிரிடலாம் இதன் முலம் ஏக்கருக்கு 17,780 செடிகள் வளர்ந்து செடி ஒன்றுக்கு ஒன்று முதல் இரண்டு கதிர்கள் வரை உற்பத்தியாகி அறுவடைக்குத் தயாராகும். ஒரு ஏக்கருக்கு 17,780 முதல் 25000 இனிப்பு மக்காச்சோள கதிர்கள் கிடைக்கும். ஒரு கதிர் சராசரியாக 8ரூ. முதல் 10ரூ வரையிலும் விற்கப்படுகிறது.

அறுவடையை காலை அல்லது மாலையில் மேற்கொள்ளலாம். அறுவடை செய்யப்பட்டக் கதிர்களை வெயில் படாதவாறு குறைந்த வெப்பநிலையில் சேமிப்பதன் மூலம் இதன் சுவை மாறாமல் பாதுகாக்கலாம்.

இனிப்பு மக்காச்சோளத்தினை அறுவடை செய்தபின்பு செடிகள் பச்சையாக இருப்பதால் கால்நடைகளுக்கு அவற்றைப் பசுந்தீவனமாகப் பயன்படுத்தலாம். ஏக்கருக்கு 100 முதல் 160 குவிண்டால் பசுந்தீவனம் கிடைக்கும். இதனால' விவசாயிகளுக்கு குறைந்த காலத்தில் கூடுதல் வருமானம் கிடைப்பதுடன். பசு மாடுகளுக்குத் தேவையான சத்து நிறைந்த பசுந்தீவனமும் கிடைக்கின்றது.

**தொகுப்பு**
சு. சுமதி
தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)
தூத்துக்குடி வேளாண் அறிவியல் மையம்